# இலங்கையின் அரசியல் யாப்பின்
# 13வது திருத்தச் சட்டம்



அ. வரதராஜப்பெருமாள்

முன்னாள் வடக்கு- கிழக்கு மகாணசபை முதலமைச்சர்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

[EPRLF – Pathmanabha]

September, 2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் இனப்பிரச்னைக்கான தீர்வுகள்

இலங்கையின் முன்னேற்றத்திற்கும் சபீட்சத்திற்கும் சொல்லொணாப் பேரழிவுகளை ஏற்படுத்திய இனப்பிரச்னையை ஒரு நிரந்தரமாக முடிவுக்கு கொண்டு வருவதற்கு அண்மைக்காலமாக அரசியற் தீர்வு தொடர்பாக கீழ்க்காணும் பல்வேறு குரல்கள் எழுப்பப்படுகின்றன:

- 13வது திருத்தம் முழுமையாக அமுல் செய்யப்பட்டாலே போதும்.
- 13வது திருத்தம் போதாது அதைவிடக் கூடுதலாகத் தரப்பட வேண்டும்.
- 13வது திருத்தத்தின் பிரகாரம் மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரமோ, நில அதிகாரமோ, நிதி அதிகாரமோ வழங்கப்படக் கூடாது.
- மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரமும் தேவையில்லை, நில அதிகாரமும் தேவையில்லை, நிதி அதிகாரமும் தேவையில்லை, இப்போதுள்ள நடைமுறையே திருப்திகரமாக உள்ளது.
- 13வது திருத்தமே கூடாது அது முற்றாக நீக்கப்பட்டு புதிய அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- 13வது திருத்தத்துக்கு மாற்றாக ஒரு அரசியற் தீர்வை அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதிகள் குழு உருவாக்கிக் கொண்டு வருகிறது. அதுவரையும் பொறுத்திருக்க வேண்டும்.
- ஒற்றையாட்சி முறை நீக்கப்பட்டு அதிகபட்சமான அதிகாரங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.
- ஒற்றையாட்சிக்குள்ளேயே அரசியற் தீர்வு இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இந்திய அரசியல் முறை கொண்டுவரப்பட வேண்டும்.

- அமெரிக்கா, கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் கடைப்பிடிக்கப்படும் சமஷ்டி அமைப்பு முறை வேண்டும்.

- தமிழீழத்தைத் தவிர வேறெதுவும் தீர்வாகாது.

- நாட்டுக்குள்ளேயே உருவாக்கப்படும் ஒரு தீர்வே முன்னெடுக்கப்பட வேண்டும்.

இந்தக் குரல்களுக்குள் 13வது திருத்தம் என்பதே இப்பபொழுதெல்லாம் அடிக்கடி கேட்கும் குரலாக இருக்கின்றது.

இதில் மிகவும் வேடிக்கை என்னவென்றால், 13வது திருத்தம் என்ன என்பதை விரிவாக அறிந்து கொள்ளாமலே - அதன் தாற்பரியத்தையோ அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தமான அதன் சாதக பாதகங்களையோ தெரிந்து கொள்ளாமலே - அதற்கு ஆதரவாகவும், அதை ஆட்சேபித்தும் பல குரல்கள், முக்கியமாக தமிழர் தரப்பிலிருந்து, எழுப்பப்படுகின்றன!

## 13வது திருத்தத்தின் பின்னணி

1978ம் ஆண்டு ஜே ஆர். ஜெயவர்த்தனா அரசாங்கம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய அரசியல்யாப்பே இலங்கையில் இப்போதும் நடைமுறையில் அதிகாரபூர்வமாக இருக்கும் அரசியல் யாப்பாகும். அது பல திருத்தங்களின் பின்னர் நிறைவேறியது. 1987ம் ஆண்டு ஏற்பட்ட இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து 13வது தடவையாக அரசியல்யாப்பு திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலமே இலங்கையில் மாகாணசபைகள் என்னும் அமைப்புகள் உருவாக்கப்பட்டன அப்பொழுது மாகாணசபைகளுக்கான அதிகாரப் பரவலாக்கல் என்னென்ன விடயங்களில் எந்தெந்த அளவில் இருக்கும் என்பவை போன்ற விடயங்களும் அரசியல் யாப்பு ரீதியில் சட்டபூர்வமாக ஆக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1987ம் ஆண்டின் இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டின் பின்புதான் 13வது திருத்தம் உருவாக்கப்பட்டது என்பது சரி அந்த உடன்பாட்டின் பிரகாரந்தான் 13வது திருத்தம் உருவாக்கப்பட்டது என்பது முற்றிலும் சரியல்ல. இந்திய - இலங்கை உடன்பாட்டில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சுருக்கமாக பின்வருமாறு:

- 1986ம் ஆண்டில் இந்திய மற்றும் இலங்கை அரசுப் பிரதிநிதி களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படை யில் மாகாணசபைகளுக்கு அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டும்.

- வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒருங்கிணைந்த ஒரே மாகாண நிர்வாகமாக அமைக்கப்படுதல் வேண்டும் இம் மாகாணசபை செயற்படத் தொடங்கி ஓராண்டுக்குள் கிழக்கு மாகாணத்தில் ஓர் சர்வசன வாக்கெடுப்பு நடாத்தப்பட்டு இணைந்த மாகாண ங்கள் தொடர்ந்து இணைந்திருப்பதா அல்லது தனித்தனியாவதா என்பது தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

இவை தொடர்பாக இந்திய அரசாங்கம் சில எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தது. அவையாவன:-

(1) புலிகளும் இந்தியாவின் முன்முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

(2) ஓராண்டுக்குள் சமாதானமான நிலைமை ஏற்பட்டு பூரணமாக ஜனநாயகரீதியான சூழல் ஏற்பட்டுவிடும்.

(3) உள்நாட்டிலும் இந்தியாவிலும் அகதிகளாகிப் போயிருந்த மக்கள் மீண்டும் அவரவர்களது சொந்த இடங்களில் குடியேறிவிடுவார்கள்.

(4) அந்த ஓராண்டுக்குள் தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியற் தலை வர்களுக்கிடையில் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிருஷ்டவசமாக, எதிர்பார்க்கப்பட்ட இவையெதுவும் நடைபெறவி ல்லை! புலிகளின் அரசியல் வங்குரோத்தைப் பயன்படுத்தி ஜெயவர்த்தனா தனது அரசியற் காய்களை நகர்த்தி, புலிகளைக் கொண்டே தமிழர்களு க்கு எந்த நன்மையும் கிடைக்காமல் இந்தியாவின் எதிர்பார்ப்புகளைப் பொய்யாக்கிவிட்டார். சிங்களத் தலைவர்களை நம்பமுடியாது என்று சொல்லிக் கொண்டே சிங்கள இனவாதத் தலைவர்களுக்குத் துணை யாகச் செயற்பட்டு தமிழர்களின் போராட்டத்தை பின்தள்ளிவிட்டதுதான் பிரபாகரன் தலைமையிலான புலிகள் செய்த சாதனை!

ஜெயவர்த்தனா தானே தனிப்பட்டரீதியில் முன்னின்று தனது சட்ட ஆலோசகர்கள், சட்ட வரைவாளர்களைக் கொண்டு காதும் காதும் வைத்தது போல சில இரவுகளிலேயே 13வது திருத்தத்தை வரைந்து முடித்தார் அதனை ஒரே நாளிலேயே நாடாளுமன்றத்தில் சட்டமாக் கினார். பார்வைக்கு 13வது திருத்தம் இந்திய அரசியலமைப்பில் மாநிலங் களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்தது போலவே வடிவமைக்கப்பட்டது. ஆனால், உண்மையில் அப்படியல்ல! இது சுட்டிக்காட்டப்பட்டபோது, இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி அப்போதைய வெளியுறவு அமைச்சர் நரசிம்மராவை இலங்கைக்கு அனுப்பி வைத்தார் ஆனால் ஜெயவர்த்தனா எதற்கும் ஒப்புக் கொள்ளாமல் தந்திரமாகத் தவிர்த்துக் கொண்டார். அந்த நேரத்தில் புலிகள் இந்தியப் படைகளுக்கு எதிராகச் சண்டையில் ஈடுபட்டு இந்திய அரசாங்கத்தை இந்திய அளவிலும் சர்வதேச ரீதியிலும் சங்கடத்திற்கு உள்ளாக்கி வைத்திருந்தது. எனவே, 13வது திருத்தம் சட்டமாக ஆக்கப்பட முன்னர் இந்தியாவின் பார்வைக்கு காட்டப்படவுமி ல்லை அதனை இறுதியாக ஆக்குவதில் இந்தியாவின் நேரடிப் பங்களி ப்போ அல்லது ஆலோசனையோ பெறப்படவுமில்லை.

இந்திய - இலங்கை சமாதான உடன்பாட்டைத் தொடர்ந்து, சிங்களவர் களை பெரும்பான்மையாகக் கொண்ட தென்னிலங்கை மாகாணங்களில், கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக மாகாணசபை முறைமை தொடர் ந்து செயற்பட்டு வருகின்றன. ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைத்த மாகாணசபை பதினாறு மாதங்கள் மட்டுமே செயற்பட முடிந் தது. மேலும், மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் 2007ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு-கிழக்கு மாகாணங்களின் மாகாணசபை நிர்வாகம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. கடந்த பதினைந்து மாதங்களாக பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தில் மாகாணசபை முறைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

## 13வது திருத்தத்தின் கீழ் அதிகாரப்பரவலாக்க நிறைவேற்றம்

கடந்த இருபது ஆண்டுகளாக தென்னிலங்கையில் உள்ள ஏழு மாகாணங்களிலும் பெரும்பாலும் கொழும்பு மைய அரசாங்கக் கட்சியைச் சேர்ந்தவர்களே ஆட்சியில் இருந்து வந்திருந்த போதும், அம்மாகாணங்களிலும் 13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை.

கிழக்கு மாகாணத்தின முதலமைச்சரும் அரசின் ஆதரவுக் கட்சிக்காரராக இருந்தும், அவர் ஒரு சடங்கு சம்பிரதாய முதலமைச்சர் என்ற கட்டத்துக்கு மேல் அங்கும் அதிகாரப்பகிர்வு நடைபெறவில்லை.

இந்த நிலைமை மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் மட்டும் தான் என்றில்லை. - பிரேமதாசாவின் காலத்திலும் இதுதான் மேல்மாகாண முதலமைச்சராக சிலகாலம் இருந்து மாகாண அதிகாரங்கள் தொடர்பாக அதிருப்திப்பட்டுக் கொண்ட சந்திரிகாவின் ஜனாதிபதிக் காலத்திலும் இதுதான் நிலைமை! - ஜெயவர்த்தனா, பிரேமதாசா, சந்திரிகா, மஹிந்த என நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சியில், ஒருவர் மாறி மற்றவர் ஆட்சி பீடத்தில் ஏறிய போதும், அதிகாரப் பரவலாக்கல் விடயம் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகத்தான் நடந்தேறி வருகிறது என்பதுதான் கடந்த இருபது ஆண்டுகால அனுபவமாகும்!

எனவே, தவறு ஜனாதிபதிகளிடத்தில் எந்தளவு தூரம் இருக்கிறது என்பதை அளவிட முன்னர், 13வது திருத்தம் அடிப்படையில் கொண்டிருக்கும் தவறுகளை - முரண்பாடுகளை - கண்டறிந்து புரிந்து கொள்வது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13வது திருத்தம் அடிப்படையில் கொண்டிருக்கும் தவறுகள் முரண்பாடுகள்

13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றினால் பிரச்சினைகளுக்கு குறைந்த பட்சமாயினும் திருப்திகரமான தீர்வு கிடைக்குமா? என்ற கேள்விக்கு, 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுதல் என்று சொல்வதன் அர்த்தம் என்ன? என்பது பற்றி ஒரு தெளிவான விளக்கம் வேண்டும் அந்த விளக்கத்தைப் பெறவேண்டுமாயின், 13வது திருத்தத்தில் எவ்வாறு எந்தெந்த விடயங்களில் எந்தெந்த அளவுக்கு அதிகாரப் பகிர்வு சட்டரீதியாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது? என்ற கேள்விக்கு விபரமான அறிவும் புரிதலும் வேண்டும்.

அரசியல் யாப்பின் 13வது திருத்தம் அதிகாரப் பகிர்வு விடயத்தில் சரியாக அமையாத, அமைக்கப்படாத, ஒரு சட்டம். ஏனெனில்:-

- மிகப் பெரிய அளவில் மத்திய அரசுக்கு வசதியாக விளக்கம் கொள்ளக் கூடிய வகையில் வசன அமைப்புக்கள் உள்ளன. நிதி அதிகாரம், நிதி வளங்களின் பகிர்வு, நிர்வாக உறவுகள், நிர்வாக வளங்களின் பகிர்வு, மற்றும் நிலத்தின் மீதான அதிகாரங்கள் போன்ற விடயங்கள் குழப்பமான வாக்கிய அமைப்புக்களைக் கொண்டுள்ளன.

- நிதிவளத்துக்கு, மாகாண சபைகள் மத்திய ஆட்சியாளர்களின் தயவில் தங்கியிருப்பதால், அதிகாரப் பகிர்வின் மூன்றாவது நிரலிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும் நடைமுறையில் மத்திய அரசின் நிறைவேற்றதிகாரத்துக்கு உட்பட்டவையாகவே உள்ளன. அத்துடன், மாகாணங்களுக்கு தெளிவாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்குக் கூட மாகாண ஆட்சி களுக் குரிய நிதி ஆதாரங்கள் போதியதற்றவையாகவே உள்ளன.

- மாகாண அதிகாரத்துக்கு உட்பட்ட விடயங்களிலும் கடைநிலை ஊழியர்களைத் 'தவிர ஏனைய அனைத்து வேலை நியமணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிலும் மத்திய அரசின் ஆதிக்கம் அதிகாரம் செலுத்தும் விதமாக சட்ட ஓட்டைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது.

- பொலிஸ், சட்டம், ஒழுங்கு என்ற தலையங்கத்தில், விடயங்கள் அதிகாரப் பகிர்வு நிரலிலும் பின்னிணைப்பிலும் நீளமாக சொல்லப் பட்டிருந்தாலும், சாராம்சத்தில் அவை தொட ர்பாக அதிகாரங்கள் எதுவும் அர்த்தமுடையவையாக வழங்கப்படவில்லை.

- மத்திய அரசுக்கான நிரலில் (Union List) உள்ள விடயங்களுக்கு மட்டுமல்லாது மாகாண நிரலில் (Provincial List) உள்ள விடயங்களுக் கும் பொது நிரலில் (concurrent list) உள்ள விடயங்களுக்கும் மத்திய அமைச்சுக்களும் அமைச்சர்களும் இருப்பதனால், நிதி முழுவதுவும் அங்கேயே பகிரப்படுகிறது. இதனால் மாகாண அமைச்சுக்கள் பெயரளவில் மாத்திரமே இருக்க வேண்டியவையாக ஆக்கப்பட்டி ருக்கின்றன.

- பிரேமதாசா காலத்தில் அரசாங்க அதிபர்களைத் தவிர ஏனைய பொது நிர்வாக அதிகாரிகள் மாகாண ஆட்சிகளுக்கு உட்பட்ட வர்களென இருந்தது. ஆனால், பின்னர் அதுவும் இல்லாமற் போனது. ஆளணிகளின் பகிர்வு தொடர்பாக 13வது திருத்தம் மௌனமாக இருப்பது மத்திய அரசுக்கு அதிகாரங்களை ஆக்கிர மிப்பதற்கு மிகவும் வசதியாக உள்ளது.

- மாகாண ஆளுநர்கள், அமைச்சர்கள், மாகாணசபை உறுப் பினர்கள் மற்றும் அதிகாரிகளின் உத்தியோகபூர்வ தராதரங்கள் என்ன என்பது தெளிவாக நிர்ணயிக்கப்படாத ஒன்றாகவே உள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற ஒருவரை விட மாகாண அமைச்சர் குறைந்த அரசதரம் உடையவராகவே நடத்தப்படுகிறார் ஒரு மத்திய அமைச்சரையும் விட உயர்ந்ததர நிலை கொண்ட ஆளுநர் பதவிக்கு, பதவியிலிருக்கும் மத்திய அரச நிர்வாகிகள் நியமிக்கப்படுகிறார்கள். இவை மாகாணசபை அமைப்பு முறையைத் தரக் குறைவாக்கும் தன்மைகளைக் கொண்டவையாக உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றினால், 13வது திருத்தத்தின் மூலமான அதிகாரப் பரவலாக்கல் என்பது நடைமுறைக்கு வந்து இருபது ஆண்டுகளாகியும் இன்னமும் ஒரு குறைந்தபட்ச நம்பிக்கையேனும் தரும் ஒன்றாக அமையவில்லை என்பதே உண்மையாகும்!

## 13வது திருத்தத்தை வைத்து ஒன்றுமே உருப்படியாகச் செய்ய முடியாதா?

இந்தக் கேள்விக்கான பதில், 'அதனை முறையாக நடைமுறைப்படுத் தினால் தற்காலிகமாக அதனை நல்ல நோக்கங்களை சாதிப்பதற்காகப் பயன்படுத்த முடியும்' என்பதுதான்!

அதிகாரப் பகிர்வு விடயத்தை முழுமையாகவும் சரியாகவும் மேற்கொள் வதில் பெரும்பாத்திரம் மத்திய அரசபீடத்தில் இருப்பவர்களாலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் நாட்டின் அனைத்து மக்களினதும் நீண்ட கால நலனை மனதில் கொண்டவர்களாக இருக்க வேண்டும் தீர்மான கரமான அரசியற் துணிவு வேண்டும்! ஜனாதிபதி மஹிந் த ராஜபக்ஷ விரும்பித் துணிந்தால், அவருக்கு இப்பொழுது இருக்கும் பரவலான மக்கள் ஆதரவுடன் அவரால் இது முடியும். ஐக்கிய தேசியக் கட்சி ஒத் துழைக்கத் தயாரென்கிறது, புலிகளின் தடங்கல் எதுவும் தற்போது கிடையாது, இந்தியா உட்பட உலகின் பெரும்பான்மையான நாடுகளின் பூரண ஒத்துழைப்பும் உதவிகளும் நிச்சயமாகக் கிடைக்கும், தமிழ்நாட்டி லிருந்தும் திருப்திகரமான ஆதரவைப் பெறமுடியும், தமிழ் ஜனநாயக சக்திகள் மிகவும் உற்சாகத்தோடு செயற்படுவார்கள்.

இது விடயமாக மஹிந்த ராஜபக்ஷா நடவடிக்கைகள் மேற்கொண்டால், ஜேவிபி, ஹெல உருமய போன்ற அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், நாட்டின் நலனில் அக்கறையற்ற சிங்களப் பேரினவாதிகளும், வழமை போல் எதிர்ப்புக் குரல்கள் எழுப்புவார்கள் தான். அது ஒருநாளும் முற்றாக இல்லாமல் போகாது!. ஆனால், அதனால் ஏற்படக்கூடிய சில சிங்கள மக்களின் வாக்குகள் இழப்பை, அதற்கு மேலாக தமிழ் மக்கள் ஈடு செய்வார்கள் என மஹிந்த ராஜபக்ஷவுக்கும், அவரைச் சார்ந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதிகளுக்கும் உறுதியாகத் தெரிந்தால் - தமிழ் மக்களின் இன்றைய இன்னல்கள் நீங்க வேண்டும் என மானசீகமாகவே எண்ணும் தமிழ்த் தலைவர்கள் அதனை உறுதி செய்தால், அவர் அந்தப் பாதையில் செயற்படுவதற்கு உந்துதலாக அமையும்.

ஒரு முக்கிய விடயத்தை நாம் மனதில் கொள்ளவேண்டும்: 13வது திருத்தம் வழங்கியுள்ள அதிகாரப் பகிர்வுகளை உண்மையாகவே நடைமுறைப்படுத்தினால், அவை தமிழர் பெரும்பான்மையாயுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட இதர மாகாணங்களின் சுபீட்சத்திற்கும் வழி சமைக்கும். எனவே, இது சம்பந்தமாக அவர்களுக்கும் தெளிவு ஏற்படுத்தி, 13வது திருத்தத்தைச் சரியான முறையில் அமுல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட சிங்கள அரசியல்வாதிகளினதும், புத்திஜீவிகளினதும் ஆதரவைப் பெற முயற்சிகள் மேற்கொள்வது தேவையானதும், அவசியமானதுமாகும்.

## உச்சநீதிமன்றத்தினூடாக அதிகாரப் பகிர்வை பரிசோதித்துப் பார்த்தல்

13வது திருத்தம் இதுவரை காலமும் சட்டரீதியில் முழுமையாக நிறைவேற்றப்படவில்லையா? அப்படியானால் எவையெவை நிறை வேற்றப்படவில்லை? அல்லது, நிறைவேற்றப்பட்டுள்ளவைகள் குறைபாடான முறைகளில் நிறைவேற்றப்பட்டுள்ளனவா? அரசியல் யாப்பில் கூறப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வு விடயங்களை முழுமையாக நிறைவேற்றுதல் அல்லது அரைகுறையாக நிறைவேற்றுதல் என மேற்கொள்ள முடியுமா? அரசியல் யாப்பானது வெளிப்படையாக சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரங்களை பகிர்ந்தளித்துள்ளபோது அந்த அதிகாரங்களை யாராவது யாருக்காவது கொடுத்தல் அல்லது கொடுக்க மறுத்தல் என விடயங்கள் உள்ளனவா? அரசியல்யாப்பு மூலமாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மத்திய அரசு மறுக்க முடியுமா? அப்படி மறுக்கப்படுகின்ற விடயங்களுக்கு தீர்வு தரவேண்டியது ஜனாதிபதியா? மத்திய அமைச்சரவையா? நாடாளுமன்றமா? அல்லது உச்சநீதிமன்றமா?

இவை போன்ற கேள்விகளை எழுப்பி சட்டபூர்வமான சரியான, தெளிவான விடைகளைத் தேடுவதும் இப்போதைய அவசியமாகும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் உள்ளது போல இலங்கையிலும் உச்சநீதிமன்றமே அரசியல் யாப்பின் காவலன் - அரசியல்யாப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள நீதி நியாயங்களை நிலைநிறுத்த வேண்டிய கடமையாளன் மத்திய மற்றும் மாகாண ஆட்சி அமைப்புக்களுக்கிடையில் அதிகாரம் சம்பந்தப்பட்ட சிக்கல்கள் வரும் போது தீர்த்து வைக்கும் வல்லாண்மை உச்சநீதிமன்றத்துக்கே உண்டு. 13வது திருத்தத்தின் உண்மையான அதிகாரப் பகிர்வு அமைவை உச்ச நீதிமன்றத்திலேயே பரிசோதித்துப் பார்த்தல் வேண்டும்.

மத்திய அரசுக்கும் மாகாண அரசுக்கும் இடையே அதிகாரப் பகிர்வு குறித்த சிக்கல் ஏதும் ஏற்படுமாயின், அந்தப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசோ அல்லது மாகாண அரசோதான் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க வேண்டும். அந்த வகையில் பார்க்கையில், கிழக்கு மாகாணம் உட்பட எல்லா மாகாண ஆட்சிகளும் மத்திய ஆட்சியாளரின் சார்பான ஆட்சிகளாக இருக்கும் நிலையில் யார் அவ்வாறான வழக்கைத் தொடுக்க முன்வருவார்கள், இப்போதுள்ள எந்த மாகாண முதலமைச்சராவது 13வது திருத்தத்தின்படி நிறைவேற்றப்படாதவற்றை நிறைவேற்றும்படி கேட்டு உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் நிலையில் உள்ளாரா என்பன கேள்விக் குறிகளே!

கிழக்கு மாகாணத்தில் ஆட்சியமைக்கப்பட்டு சில வாரங்களில் அனைத்து மாகாண முதலமைச்சர்களின் மாநாடு செயற்பட ஆரம்பித்தது மாகாணங்களுக்கு அதிகாரங்கள் போதியஅளவு பகிரப்பட வேண்டும் என்ற குரல் எழுந்தது. ஆனால், ஏதோ காரணத்தால் அந்தக் குரல், எழும்பிய அதே வேகத்திலேயே அடங்கிப் போய்விட்டது!

அதிகாரப் பகிர்வு தொடர்பான ஒரு வழக்கை ஏதாவது ஒரு பொது நிறுவனமோ அல்லது ஒரு நபரோ பொதுநலன் சம்பந்தப்பட்ட வழக்கு என உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கலாமா என ஆராய்ந்து அதற்கேற்றபடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். இவையெல்லாம் செய்யும் அக்கறையும் போக்கும் அரசியல் சக்திகள் மத்தியில் நிலவினால்தான் அதிகாரப் பகிர்வு பற்றிய ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும். அத்துடன் 13வது திருத்தம் பற்றிய தெளிவான நிலைமைகளும் வெளிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படும். சிங்களப் பேரினவாத சக்திகள் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பிரிப்பதிலும், அதிகாரப்பகிர்வுக்கு எதிராகவும் உச்சநீதி மன்றத்தைப் பயன்படுத்துவதில் கொண்டிருக்கும் அக்கறையும் ஈடுபாடும் ஜனநாயக முற்போக்கு சக்திகளிடம் அவர்களது இலக்குகள் தொடர்பாக காணப்பட வில்லை என்பதே வேதனையான உண்மையாகும்!

அரசியல்யாப்பில் உள்ள 13வதுதிருத்தம் வழங்கியுள்ள அதிகாரப் பகிர்வு களை செயற்பட வைப்பதற்கு, அவை சம்பந்தமாக உச்சநீதிமன்றத்தையும் அணுகி, அது ஒரு விரிவான, ஆழமான தலையீட்டை மேற்கொள்வதற் கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதும், அவற்றினை மேற்கொள்ளுவ தும், நாம் அவசியமாகவும், உடனடியாகவும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளாகும்.

உச்ச நீதிமன்றம், 13வது திருத்தத்தில் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங் களையும், அந்த விடயங்கள் அரசியல்யாப்பில் கொண்டுவரப்பட்டதன் அடிப்படைகளையும் கவனத்திற் கொண்டு கீழே கூறப்பட்டுள்ள பிரதான மான மூன்று வகைப்பட்ட விடயங்களுக்குரிய தெளிவான சட்ட விளக்கங்க ளைத் தருவதோடு அவற்றிற்கு அமைவான கட்டளைகளையும் பிறப்பித் தல் வேண்டும்:

(1) 13வது திருத்தத்தில் உள்ள விடயங்களை முழுமையாகவும், சரியாகவும் மத்திய அரசாங்கம் நிறைவேற்றாமையைக் கண்ட றிதல்: உதாரணமாக, தேசிய மற்றும் மாகாண பொலிஸ் ஆணைக் குழுக்களை நியமிக்காமை, மாகாணங்களுக்கு உரிய நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்களையும், இலாக்காக்களின் அசை யும் மற்றும் அசையாச் சொத்துக்களையும் உரிய நிறைவேற்று அதிகாரங்களுக்கு அமைய இன்னமும் பகிரப்படாமை போன்றன.

(2) 13வது திருத்தத்தில் உள்ள விடயங்களில் மத்திய அரசாங்கம் சட்டத்துக்கு முரணாகச் செயற்படுகின்றமையை வெளிப்படுத்தல்: உதாரணமாக, கிழக்கு மாகாணத்தில் நிதி அமைச்சர் பதவியை யும் அதிகாரங்களையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருக்கு ஆளுநர் கையளிக்க மறுப்பது ஆசிரியர் வேலைகளை மத்திய அமைச்சரே வழங்குவது வைத்தியசாலை மற்றும் சுகாதார விடயங்களின் அதிகாரங்களை இன்னமும் மத்திய அமைச்சரே வைத்திருப்பது போன்றவை.

(3) 13வது திருத்தத்தில் உள்ள சில முக்கியமான சொற்பதங்களுக்கு சரியான சட்ட விளக்கங்களைத் தருதல்: உதாரணமாக, மாகாணங்களின் வரிவருமானங்கள், பொது நிரலில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்தினதும் மீதான நிறைவேற்றதிகாரம் எந்த ஆட்சியமைப்புக்கு உரியது, மற்றும் ஆளுநரின் நிறைவேற்றதிகார வரையறைகள் போன்ற விடயங்கள்.

உச்சநீதிமன்றத்தை அணுகுவதன் மூலம் நாம் எதிர்பார்க்கக் கூடிய திருப்திகரமான நிலையை எந்தளவு அடையலாம் என்பதை இப்போதே எதிர்வுகூற முடியாது. - எனினும், அதை முறையாக அணுகுவதன் மூலம் சில பலாபலன்களை அடைய வாய்ப்புகள் உண்டு.

## 13வது திருத்தம் நிரந்தரமான அரசியற் தீர்வாகுமா?

13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படக் கூடாது என சிங்களப் பேரினவாத சக்திகள் கூச்சல் போடுவதிலிருந்தே 13வது திருத்தத்தில் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனாலும், 13வது திருத்தம், இப்போதுள்ள அதன் அமைப்பு, குறைபாடுகள், முரண்பாடுகள் ஆகிய காரணங்களால், மகாணங்களுக்கான உண்மையானதும், போதுமானதுமான அதிகாரப் பரவலாக்கத்துக்கு திருப்திகரமானதல்ல! - இலங்கையின் அரசியல்யாப்பின் 13வது திருத்தச் சட்டம் மாகாணசபைக்கான அதிகாரங்களை அளிப்பதில் திருப்தியற்ற ஒன்று என 20 ஆண்டுகளுக்கு முன்னரே இலங்கை அரசுடன் அரசியல் ரீதியில் போராடி அந்த 13வது திருத்தத்துக்கு மாற்றாக பத்தொன்பது அம்சக் கோரிக்கைகளை இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தத்தின் ஒரு பொறுப்பாளியான இந்திய அரசுக்கும் அன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கும், வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோக பூர்வமான தீர்மானமாக இலங்கை அரசுக்கும் முன் வைத்தி ருந்தேன். அவற்றினை அன்றைய ஜனாதிபதி பிரேமதாசா நிதானமாக, நாட்டு மக்களின் நலன் கருதி பரிசீலித்து அமுலா க்கி இருந்திருந்தால், அதற்கு பின்னர் தொடர்ந்து ஏற்பட்ட சொல்லொணா உயிர் உடமைகளின் இழப்புகளையும், அனர்த்தங்கயைும், தமிழர்களின் இன்றைய இழிநிலை யையும் நிச்சயமாகத் தவிர்த்திருக்கலாம். ஆனால் அது செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது! பிரேமதாசாவின் அலட்சியத்திற்கு, புலிகளும் துணைபோனது நல்ல வாய்ப்பாகி விட்டது. இதனால்தான், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அன்று மாகாண சபை அதிகாரத்தைக் கைவிட நேர்ந்தது. எமது அந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டபடியாற் தான், பின்னர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்ப்பட்ட சந்திரிகா அவர்கள் ஓர் அரசியற் தீர்வை முன்வைத்தார். 13வது திருத்தம் போதியதல்ல என்ற நிலைப்பாட்டினால்தான் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் தலை மையில் அனைத்துக் கட்சிகளின் கமிட்டியை அமைக்க வேண்டி யேற்பட்டது.

எனினும், இப்போதுள்ள அரசியல்யாப்பில் ஏற்கனவே 13வது திருத்தம் என்ற வடிவில் அதிகாரப் பகிர்வு உள்ளது என்ற வகையில் இப்போதை க்கு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு நல்ல நோக்குடன் தற்காலிகமாக, அதிகாரப்பகிர்வு விடயங் களை உடனடியாக முன்னெடுக்க வேண்டியது அவசியமானது. முறையாக உள்ளடக்கங்களைக் கொண்ட சரியானதொரு அரசியல் தீர்வின் வரைவு இறுதி செய்யப்பட்டு சட்டமாக்கப்படுவதற்கு ஒரு கால அளவு கட்டாயமாகத் தேவைப்படும் என்பதை மறுப்பதற்கி ல்லை. ஆனால், அது ஒரு கபட உள்நோக்கம் கொண்ட திட்டமிடப்பட்ட காலதாமதமாக இருக்கக் கூடாது. அந்த இடைக்காலத்தில் மேற்கொள்ள ப்பட வேண்டிய உடனடியான அரசியல் நடவடிக்கையாக, மக்கள் மத்தி யில் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பும் விதமாக 13வது திருத்தத்தை ஆக்கபூர்வமாக அமுல்படுத்தலாம்.

ஆனால், தொடர்ந்தும் 13வது திருத்தத்தின் அடிப்படையிலான மாகாணங் களுக்கான பரவலாக்கங்களை இதயசுத்தியுடன் மத்திய அரசால் நடை முறைப்படுத்தப்படாவிட்டால், இருக்கும் சிறிய நம்பிக்கைகளும் சிதறடிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பட்டுவிடும். 13வதுதிருத்தத்தை ஆக்கபூர்வமாக செயற்பட வைப்பதற் குரிய நடவடிக்கைகளை தமிழ் மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கு மிக்க அரசியல் சக்திகள், புத்திஜீவிகள் செயற்படாமல் இருப்பதுவும் தவறாகும்! அர்த்தமுடையதும், பயனுள்ளதுமான வகையாக 13வது திருத்தம் நிறை வேற்றப்பட வேண்டுமானால், அது தொடர்பாக சில அடிப்படையான விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அவற் றில் பிரதானமானவை பின்வருமாறு:

1. 13வது திருத்தத்தை முடிந்தளவு மாகாணசபைகளுக்கு சார்பாக விளக்கமளிக்கும்படி அதிகாரம் கொண்ட அதிகாரப் பகிர்வு ஆணை க்குழு (Devolution Commission) ஒன்று ஜனாதிபதியால் கட்சிசார்பற்ற நிபுணர்களைக் கொண்டு உடனடியாக அமைக்கப்படல் வேண்டும். இந்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையிலேயே அதிகாரப் பகிர்வின் நடைமுறை விடயங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. மதிப்புக் கூட்டு வரி (VAT) உட்பட விற்பனவு வரிகள் (Sales Taxes), மதுபான வரி வருமானங்கள் (Taxes and other revenues on alcohols), சொத்துமாற்ற வரிகள் (Stamp duties on Property Transfers) போன்றன உட்பட மாகாணசபைகளின் வரி வருமானங்களென 13வது திருத் தத்தில் உள்ள 19வகை வருமானங்களும் திரட்டப்பட்டு காலதா மதமின்றி முழுமையாக மாகாண ஆட்சிகளுக்கு உரியபடி பகிர்ந்த ளிக்கப்பட வேண்டும். அத்துடன் வருமானவரி (Income Tax), சுங்க வரிகள் (Custom Duties) மற்றும் வெளிநாட்டு வர்த்தக (Foreign Trade) வரிகளிலி ருந்து கிடைக்கும் வருமானத்திலும் கணிசமான பங்கு மாகாண அரசுகளுக்கு தேசிய நிதி ஆணைக்குழுவின் சிபார்சின் பிரகாரம் பகிரப்பட வேண்டும். மத்திய அரசாங்கத்தால் மட்டுமே நிர்வகிக்கப்பட வேண்டிய விடயங்களான நாட்டின் பாதுகா ப்பு, ஒருமைப்பாடு, வெளிநாட்டுறவு, கப்பல்துறை மற்றும் துறைமுகங் கள், விமானங்கள் மற்றும் விமான நிலையங்கள், றெயில்வே, மத்திய நிதிநிர்வாகம், வங்கிகள், தொலைத் தொடர்புகள், தொலை க்காட்சிகள், மற்றும் வானொலி கட்டுப்பாடுகள், வெளிநாட்டு வர்த்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் போன்ற நாடு தழுவிய மற்றும் தேசிய விடயங்களைத் தவிர, ஏனைய விடயங்கள் பெரும்பாலும் மாகாண சபைகளால் நிறை வேற்றப்படுபவையாக இருக்க வேண்டும் என்ற உணர்வோடு மத்திய நிதிவளங்கள் மாகாண அரசுகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.

3. அதற்கு உரிய வகையில் குறைந்த பட்சமான அமைச்சுக்களையும் நிர்வாகக் கட்டமைப்புக்களையும் வைத்துக் கொண்டு ஏனையவ ற்றை மாகாண அரசுகளிடம் விட்டுவிட வேண்டும். இதன் மூலம் அநாவசியமாக உருவாகும் இரட்டை நிர்வாக அமைப்புக்களையும் அதனால் ஏற்படும் இரட்டைச் செலவீனங்களையும் தவிர்ப்பதோடு மாகாண அரசுகளை மக்கள் மத்தியில் சமூக பொருளாதார அபிவி ருத்தி விடயங்களில் காரியதாக்கம் கொண்டவையாக செயற்படும் நிலையை உருவாக்க வேண்டும்.

4. மத்திய அரசின் அதிகாரத்துக்கு உட்பட்ட பெருவீதிகள், சிறப்பு வீட்டுத்திட்டங்கள், குறிப்பிட்ட சமூக நலத்திட்டங்கள் மற்றும் அபிவி ருத்தித் திட்டங்கள் என்பன மாகாண அரசின் நிறைவேற்று நிர்வா கங்கள் மூலமாகவே மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்விடயங் களில் மத்திய அரசாங்கம் மாவட்டங்கள் தோறும் தனது மேற்பா ர்வை அதிகாரிகளைக் கொண்டிருப்பதைத் தவிர கீழ்நிலைப்பட்ட இலாகாக்களைக் கொண்டிருக்கக் கூடாது.

5. அரசாங்க அதிபர்கள் உட்பட பொதுநிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அந்தந்த மாகாண ஆட்சிகளின் நிர்வாகங் களுக்கு உட்பட்டவர்களாக ஆக்கப்படுதல் வேண்டும். மத்திய அரசின் விடயங்களை நிறை வேற்றுவதில் அந்த உயர் நிர்வாக அதிகாரிகள் மத்திய அரசின் கட்டளைகளுக்குப் பணிவாக செயற்பட வேண்டும். அப்படியில்லையாயின் மாகாண ஆட்சிகள் தமக்கென மாவட்டங்கள், பிரதேச எல்லைகள், கிராமங்கள் வரை பொது நிர்வாக அதிகாரிகளையும் ஊழியர்களையும் தனியாகக் கொண்டி ருக்க வகை செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. புனர்வாழ்வு வேலைகளும், மத்திய அரசின் கட்டிடங்கள் தவிர்ந்த வற்றின் அனைத்து புனரமைப்பு வேலைகளும் முழுமையாக மாகாண அரசுகளின் அதிகாரத்துக்கு உட் பட்டவையாக ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். அந்த வகையில் அவற்றுக்கான நிதிகள் மாகாண நிர்வாகத்துக்கு உட்பட்டவையாக ஆக்கப்பட வேண்டும்.

7. விவசாயம், நீர்ப்பாசனம், மீன்பிடி, கிராமிய அபிவிருத்தி, நகரங்களின் அபிவிருத்தி, சிறு தொழில்கள் மற்றும் குடிசைக் கைத்தொழில்கள், சமூக நல சேவைகள், கூட்டு றவு அமைப்புக்கள், மாகாணங்களுக் குள் வர்த்தகம், மாகாணங்களுக்குள் போக்குவரத்து, உள்ளூர் சுற்றுலாத்துறை போன்றவையும் அவை தொடர்பான விடயங்களும் முழுமையாக மாகாண அரசுகளின் அதிகாரங்களாக அமையும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

8. மத்திய அரசின் கல்வி நிலையங்களென விசேடமாகக் குறித்து அறிவிக்கப்பட்டவற்றைத் தவிர ஏனைய அனைத்து பள்ளிக்கூடங் களினதும் மற்றும் தொழில் பயிற்சிக் கல்வி நிலையங்களினதும் அபிவிருத்தி, நிர்வாகம், ஆசிரியர்கள் நியமனம் போன்றவற்றின் முழுமையான அதிகாரம் மாகாண சபைகளுக்கு உரியதாக விடப்பட வேண்டும்.

9. மத்திய அரசுக்கு உட்பட்டதென திட்டவட்டமாகக் கூறப்பட்டவற்றைத் தவிர ஏனைய அனைத்து வைத்தியசாலை கள் மற்றும் வைத்திய சேவைகளின் விருத்தியும் நிர்வாகமும், மேலும் சுகாதாரம், மருந்து கள் மற்றும் தொடர்பான அதிகாரங்களும் தலையீடற்ற விதமாக மாகாண அரசுகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

10. மாகாண பொலிஸ் பிரிவானது மாகாணசபையின் சட்டங்களுக்கும் மாகாண முதலமைச்சரின் கட்டளைகளுக்கும் கீழ்ப்படிவாக செய ற்பட வேண்டும் என்ற நிர்வாக ஏற்பாடொன்றை ஜனாதிபதி மேற் கொள்ள வேண்டும். அத்துடன் மாகாண மற்றும் தேசிய பொலிஸ் ஆணைக்குழுக்களை காலதாமதமின்றி நியமிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. காடு மற்றும் அரச நிலங்களின் பாவனை தொடர்பாக மத்திய அரசு கொள்ளும் சுற்றுச் சூழல் கொள்கைகளுக்கு அமைய மாகாண அரசுகளே நிலப்பாவனை, நில நிர்வாகம், நில அபிவிருத்தி, நிலப்பகிர்வு, அரசநிலங்களில் குடியேற்றங்கள் மற்றும் காட்டு வளங்கள் பற்றிய விடயங்களில் முழுமையான நிறைவேற்றதிகாரம் கொண்டிருக்க வகை செய்தல் வேண்டும்.

12. தேர்தல் நடத்துவதைத் தவிர உள்ளூராட்சி அமைப்புக்கள் தொடர்பான அனைத்து அதிகாரங்களும் மாகாண ஆட்சிகளுக்கு உட்பட்டவையே என்பது உறுதியாக நிலை நாட்டப்பட வேண்டும்.

அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தை இந்திய இலங்கை சமாதான உடன்பாட்டுக்கு அமைவாக நிறைவேற்ற வேண்டுமாயின் -தமிழர்களின் அரசியற் கோரிக்கைகளை குறைந்த பட்சமாயினும் முறையாகத் தீர்த்து வைக்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகிறது என்பது உண்மையானால் - மேலே குறிப்பிட்டுள்ள பிரதானமான விடயங்களை குறிப்பிட்டுள்ள பிரகாரம் நிறைவேற்றினால்தான் 13வது திருத்தம் பயனுடையதாக இருக்கும். அப்போது தான் 13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படும் - நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்வதில் உண்மையான அர்த்தம் ஏற்பட முடியும்.

அதைவிடுத்து, அரசியல் மற்றும் ராஜரீக அழுத்தங்களைத் திசைதிருப்புவதற்காக மேலேழுந்தவாரியாக 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவோம் என்று வாக்குறுதி அளிப்பதிலோ அல்லது 13வது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று வாக்கு வேட்டைக்காக தேர்தல் கோஷம் போடுவதிலோ அர்த்தமில்லை அதேபோல், 13வது திருத்தத்தைக் கண்ணை மூடிக்கொண்டு அது புறக்கணிக்கப்பட வேண்டிய ஒன்று எனச் சொல்வதுவும் தவறாகும்.

மேற்படி வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் எதுவும் அதீதமான கோரிக்கைகளோ அல்லது 13வதுதிருத்தத்தை மீறியவையோ அல்ல! உண்மையில் 13வது திருத்தத்தை சரியாக அமுல்படுத்தி மாகாணங்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரம் பகிரப்பட வேண்டும் - மாகாண ஆட்சிகள் அரசியல் ரீதியில் அர்த்தபுஷ்டி உடையவையாக இருக்க வேண்டும் என்றால் - மக்களைத் திருப்திப்படுத்தும் வகையில் காரியசித்தி உடையவையாக அவை செயற் பட வேண்டுமென்றால், நான் கூறியுள்ளபடி 13வது திருத்தம் வியாக்கியா னம் (interpretation) தரப்பட்டு, விடயங்கள் நடைமுறையாக வேண்டும்.

அதற்கு மாறாக, கடந்த 20 ஆண்டுகளாக தென்னிலங்கையின் ஏழு மாகாண ஆட்சிகளுக்கும், கடந்த 15 மாதங்களாக கிழக்கு மாகாணத்துக் கும் வழங்கப்பட்டது போலத்தான் இனியும் தொடர்ந்து மாகாண ஆட்சிகளு க்கு அதிகாரங்கள் வழங்கப்படுமாயின், இந்த மாகாண ஆட்சிகள் தெண் டச் செலவும், உண்மையான அதிகாரப் பரவலாக்கத்தை உள்ளடக்காத அரசியல் பம்மாத்தும் ஆகும். இது மத்திய ஆட்சியாளார்கள் உலகுக்கு வேடிக்கை காட்டவும், சுமார் 400 பேருக்கு மாகாண சபை உறுப்பினர்கள் என ஊரைச் சுத்தும் பதவியளிக்கவும், 45 பேருக்கு மாகாண அமைச்சர்க ளென மக்கள் பணத்தில் ஒரு பகுதியைச் சுருட்டும் வாய்ப்புக்களைத் தரவும் தவிர வேறெதற்கும் பயன்படாது.

ஜனாதிபதியும் அவரோடு இணைந்த ஆட்சியாளர்களும் 13வது திருத் தத்தை பயன்படுத்துவதில் கொண்டிருக்கும் நோக்கத்தையும் பயன்படுத் தும் விதத்தையும் பொறுத்ததுதான் 13வது திருத்தத்தின் பயன்பாடு அமையும். 13வது திருத்தத்தை நல்லபடி நிறைவேற்றுவது என்பது ஒரு பெரும் அரசியற் சவால்!

## ஜனாதிபதி செய்ய வேண்டியன

13வது திருத்தத்தை முழுமையாகவும், முறையாகவும் நிறைவேற்ற விரும்பத் தயாராகும் ஒரு ஜனாதிபதி, குறிப்பாக இரண்டு விடயங்களை அடிப்படையில் சாதிக்க வேண்டும்:

(1) இப்போது 90 பேர் மத்திய ஆட்சியில் அமைச்சர்களாக இருக்கி றார்கள் இந்த எண்ணிக்கையை ஆகக் கூடிய பட்சம் 35 ( 225 நாடாளுமன்னற உறுப்பினர்களில் 15 சதவீதம்) பேருக்கு மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லாது குறைக்க வேண்டும். ஏனென்றால், அத்தனை அமைச் சர்களை மத்தியில் வைத்துக் கொண்டு, மாகாண அமைச்சர்களு க்கான பணிகளையும், நிர்வாகக் கட்டமைப்புக்களையும் உரிய வகையிலும், காரியதாக்கம் கொண்டவையாகவும் வழங்க முடியாது.

(2) மொத்த அரச வருமானத்தில் குறைந்த பட்சம் 50 சத வீதத்தையாவது மாகாண ஆட்சிகளின் நிர்ணயத்துக்கும் நிர்வாக த்துக்கும் பகிர்ந்தளிக்க வேண்டும். மாகாணங்களுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றுவதற்கு போதியளவு நிதி ஆதாரங்கள் இன்றியமையாதவை.

இந்த இரண்டு விடயங்களும் நடைமுறைப்படுத்தப்படாமல் 13வது திருத்தத்தை முழுமையாக, மக்களுக்குப் பயனளிக்கும் அதிகாரப் பரவ லாக்கம் கொண்டதாக நிறைவேற்றுவது சாத்தி யமில்லை! ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த இரண்டு விடயங்களையும் செய்ய வேண்டும் அதற்கு அவரைச் சூழ்ந்தவர்கள் ஒத்துழைக்க வேண்டும் அதற்கு சம்பந்தப் பட்ட மற்றைய சக்திகள் உந்துதல்களும், ஆதரவும் கொடுக்க வேண்டும்!

## மாற்றம் அவசியமே

எவ்வாறாயினும், 13வது திருத்தத்தின் இப்போதைய அமைப்பின் பிரகா ரம், அதன் நல்லபோக்கும் கூடாத போக்கும், சட்டத்தின் ஆட்சியாக அல்லாமல் மத்திய ஆட்சித் தலைவரின் தனிப்பட்ட நோக்கத்திலும் கருத்திலும் தங்கியிருப்பதாகவே இருக்கும். ஆட்சி மாறினால் 13வது திருத்தத்தின் நடைமுறையும் மாறக் கூடும். எனவே, அதனை நீண்ட காலத்துக்கு நம்பியிருக்க முடியாது. அதனால், 13வது திருத்தம் நல்ல முறையில் முழுமையாக நிறைவேற்றப்பட்டாலும் கூட, மற்றொரு அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் நல்லமுறையில் மாற்றி அமைக்க ப்பட்டால்தான் அது ஒரு பெரிய பயனுடைய விடயமாக அமையும் என்பதும், மிக விரை வில் அதற்கு மாற்றாக சட்டரீதியாக நிரந்தரம் கொண்ட சரியானதொரு அரசியற் தீர்வு ஆக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என்பது தீர்க்கமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துக்கட்சிகளின் பிரதிநிதிகள் குழுவுக்குத் தலைவரான பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களும், 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றுவது ஒரு தற்காலிக ஏற்பாடே, அது பிரச்சினைகளுக்கு முழுத் தீர்வாகாது, அரசியல்யாப்பு திருத்தத்தின் மூலம் அர்த்தபுஷ்டியான அதிகாரப் பரவலாக்கம் நிறைவேற்றப்பட்டால்தான் தமிழ்மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தக் கூடிய நிலைமை ஏற்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## நமது கடமை

மிகப் பெரும்பாலானவர்கள் 13வது திருத்தம் பற்றிய எந்த அறிவும் இல்லாமலே - பரவலாக எழுப்பப்படும் கோஷங்களை அடிப்படையாக வைத்து - 13வது திருத்தம் மீதான அதிருப்தியைக் காட்டுகின்றனர் சிலர் சில நபர்களின் நுனிப்புல் மேய்ந்த வகையான கருத்துக்களைக் கேட்ட அளவிலேயே தமது அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றனர். 13வது திருத்தம் பற்றி முறையாகக் கிரகித்து புரிந்து கொள்ளாமல் ஒருவர் இலங்கையில் அதிகாரப் பகிர்வு பற்றி தமது தெளிவான அபிப்பிராயங்களை உருவாக்கிக் கொள்ள முடியாது.

எவ்வளவுதான் குறைபாடுகளைக் கொண்டதாக இருந்த போதிலும், அடுத்த கட்டமான அதிகாரப்பகிர்வு முன்னேற்றமானது 13வது திருத்தத்திலிருந்து முன்னோக்கி உந்திப் பாயும் ஒரு விடயமே. - எனவே 13வது திருத்தம் பற்றிய முறையான அறிவும் தெளிவான புரிதலும் சமூக இலட்சியப் பாதையில் உள்ள இன்றைய தேவையாகும். அத்துடன், 13வது திருத்தத்தை முழுமையாகவும் முறையாகவும் நடைமுறையாக வைப்பதற்கான வேலைகளை ஆக்கபூர்வமாக முன்னெடுப்பதுவும் தமிழர்களின் நலன்கள் மீது உண்மையான அக்கறை கொண்டோரின் கட்டாயமான கடமையுமாகும்.

((((()))))



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**E-mail : eprlf_pathmanabha@yahoo.com**

**Web : http://www.eprlf.net**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org